பக்கத்தில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆராய்ச்சி செய்த அளவுக்கு அங்கே போதுமான தண்ணீரும், நல்ல தண்ணீரும் கிடைப்பதாகத் தெரிகிறது.

காஸ் சிலிண்டர்கள் உற்பத்தி

***272 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேரவையில் 26—2—1973 அன்று வினா எண் 168-க்கு அளித்த விடையை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Gas Cylinders உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் இசைவுக் கடிதம் கோரி எப்பொழுது விண்ணப்பிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதியன்று.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமானால் 'லெட்டர் ஆப் இன்டன்ட்' இசைவுக் கடிதம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் கடன் மனுக்கள் பரிசீலிக்கிற முறையில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எண்ணத்தில் கொண்டு தான் அண்மையில் மத்திய அமைச்சர் ஒவ்வொரு மாநிலத்திலும் 'கம்பைண்ட் செக்ரிடேரியட்' உருவாக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னால் அறிவித்ததாக 'மெயில்' பத்திரிக்கையில் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆகவே, அது குறித்து மத்திய அரசு நம்முடைய அரசுக்கு ஏதேனும் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு ஆண்டுக்கு முன்னாலே கூடிய தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய அரசாங்கம் இந்தக் கருத்தை வலியுறுத்தி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும், அப்படியில்லை யென்றால் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு இலாக்காக்களை இணைத்துப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னோம். அப்போதே மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை நிறைவேற்ற ஒரு ஆண்டு எடுத்து இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே மத்திய அரசாங்கத்திலிருந்து இசைவுக் கடிதம் கிடைத்து விட்டதா? கிடைத்து இருந்தால் என்ன விவரம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் ஏற்கனவே இந்தத் தொழிலில் உற்பத்தி அதிகம் இருக்கிறது என்பதால் புதிய தொழில் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

Stoneware Pipes Unit at Vridhachalam

* 273 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any market survey has been conducted by the Stoneware Pipes Unit of the Tamil Nadu Small Industries Corporation Limited at Vridhachalam; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருப்புவனம் வட்டாரத்தில் கயிறு தயாரிப்புத் தொழில்

* **274 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் தென்னை நாரைக் கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத் துறையில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, திருப்புவனம் வைகை யாற்றின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, தென்னை மட்டைகள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதனால் அரசாங்கம் அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ இனியாவது ஏற்பாடு செய்யுமா?